ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 2315/59 - 2023 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2023.01.20
*2315/59 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர், கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகிய நான், குறித்த சபைக்கு அலுத்கம, மதுகம மற்றும் அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் கொலேமோதர நீர் உள்வாங்கின் நிமித்தம் கையகப்படுத்திக்கொண்டுள்ள காணிக்கு மேலதிகமாக காணிப்பகுதிகளை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள இரண்டு காணிப்பகுதிகளினதும் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. : DVP/*02/02*/KT/*521.*
*நீர் வழங்கல் அமைச்சு,*
இல. *35*, “ *லக்திய மெதுர*”,
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை, பத்தரமுல்லை,*
*2023, சனவரி 11.*

**அட்டவணை**

களுத்துறை மாவட்டத்தில், மதுராவல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 815 B, பஹலகொட கிராம அலுவலர் பிரிவில், பஹலகொட கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நிலஅளவையாளரினால் 2021.09.05 ஆம் திகதி வரையப்பட்டுள்ள 008 ஆம் இலக்கத்தையுடைய திட்டப்படத்தில் துண்டு A, B என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்திலிருந்து சுமார் 01 றூட் 27.38 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதிகள்.

**துண்டு** A :

வடக்கு : கமகே பியசேன உரிமை கோருகின்ற கோலேமோதரஓவிட மற்றும் பிடகட்டிய காணி மற்றும் களுகங்கை ;
கிழக்கு : அரச காணி மற்றும் பாதை ;
தெற்கு : கமகே பியசேன உரிமை கோருகின்ற கோலேமோதரஓவிட மற்றும் பிடகட்டிய காணி மற்றும் வீதி ;
மேற்கு : கமகே பியசேன உரிமை கோருகின்ற கோலேமோதரஓவிட மற்றும் பிடகட்டிய காணி .

**துண்டு** B :

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : கமகே பியசேன உரிமை கோருகின்ற கொலேமோதரஓவிட மற்றும் பிடகட்டிய காணி மற்றும் வீதி ;
தெற்கு : கமகே பியசேன உரிமை கோருகின்ற கொலேமோதரஓவிட மற்றும் பிடகட்டிய காணி மற்றும் வீதி ;
மேற்கு : அரச காணி மற்றும் பாதை.

**காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும்** :

A - கமகே பியசேன மற்றும் பலர்
B - கமகே பியசேன

EOG 01 - 0200